STAFF COPY
NOT FOR SALE

Registered as a Newspaper

A/L 87 DAY CLASS
Mon. Fri. 7-30 — 8-30
பௌதிகம்
திரு. இ. சத்தியசீலன்
★ ஒளியியல் ★
(துரித மீட்டல் வகுப்பு)
ஆரம்பமாகிவிட்டது
New Master
INSTITUTE
8 M.G. Lane. JAFFNA.

உதயன்

விலை: ரூ. 1-25

89 A/L
பிரிவு: II
விலங்கியல் – நாகநாதன்
தாவரவியல் – குகாதரன்
பௌதிகவியல் – வர்ணம்
இரசாயனவியல் – தில்லைநாதன்
தூய - பிரயோக கணிதம் – திரு நல்லையா
New Master
INSTITUTE
8 M G Lane, JAFFNA.

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆடி சித்திரை மீ 14 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 ஷஃபான் பிறை 27 (27-04-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 128

மூதூரில் புலிகள் தாக்கியதில் எட்டு படையினர் பலி

யாழ்ப்பாணம். ஏப்ரல் 27

நேற்றுக் காலை மூதூர், கடைபறிச்சான் கிராமத்தில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய நேரடித் தாக்குதலில் எட்டுச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

கவச வாகனம் ஒன்று பலத்த சேதமுற்றது.

இத்தாக்குதலின் பின்னர் இப்பகுதியில் விமானத் தாக்குதல்கள் நடைபெற்றதாகப் பிந்திக் கிடைத்த செய்தி ஒன்று தெரிவித்தது.

தோப்பூர் கிராமத்திலிருந்து மூதூர் நோக்கிச் சென்றுகொண்டிருந்த படையினர் மீதே புலிகள் தாக்குதல் நிகழ்த்தினர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தின்போது இரு தரப்பினருக்கும் இடையில் ஒரு மணி நேரமாக மோதல் நடைபெற்றதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை இப்பகுதியில் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டதாக இந்திய வானொலி அறிவித்துள்ளது.

தாக்குதலில் மரணமான அல்லது காயமடைந்த சிப்பாய்களை ஏற்றிச் செல்ல வந்த ஹெலிக்கொப்டர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிய வருகிறது. (உ–10)

செய்திச் சாரம்

கண்டியில் 7 கடைகள் தீக்கிரை!

யாழ்ப்பாணம், ஏப். 16

கண்டியில் தமிழருக்கு சொந்தமான ஏழு கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன.

கொழும்பு குண்டு வெடிப்பு சம்பவத்திலும் ஆத்திரமடைந்தவர்களே இந்தக் கடைகளைக் கொளுத்தியதாக பிள்ளை மக்கள் பாதுகாப்பு வழங்கியதன் காரணமாக உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிய வருகிறது. (உ–10)

திருமலையில் ஊரடங்கு

கொழும்பு, ஏப். 27

திருகோணமலை மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் நேற்று இரவு 7 மணி தொடக்கம் அமுலுக்கு வந்தது. இன்று காலை 6 மணியுடன் நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (உ–எ)

கொழும்பில் ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, ஏப். 27

புறக்கோட்டை குண்டு வெடிப்புச் சம்பவத்தை படுத்து கொழும்பில் நிலவும் இரவில் பிறப்பிக்கப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் நேற்று முதல் பூரணமாக நீக்கப்பட்டது. (உ–எ)

நூறளையில் துப்பாக்கி மீட்பு!

கொழும்பு, ஏப். 27

நுவரெலியாவில் கண்டி வீதியில் அனுநரவாக் காணப்பட்ட சுறப்பு நிறப் பை ஒன்றினுள் துப்பாக்கி ஒன்றும் வெடி மருந்தும் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

இப்படி வெகுஜன தொடர்பு நிலையம் அறிவித்தது. (உ–எ)

ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 27

மட்டக்களப்பு வந்தாறுமூலை பகுதியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இரண்டு கண்ணிவெடி சம்பவங்களின் போது அரிரழப் படையினரிடம் இருந்து பல ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

இராணுவத்துடன் கடுமை தூரதேச தொலைவாட்டி –1, கோல்சர் குண்டு மகசீன் –2, ஏ கே ரைபிள் மகசீன் –7, ஜே ஆர் பிரவுசிங் –1 ஆகியவற்றையே விடுதலைப் புலிகள் கைப்பற்றியதாக அறிவிக்கப்பட்டது. (உ–10)

வல்வையில் ஷெல்

வல்வெட்டித்துறை, ஏப். 27

சனி நள்ளிரவு முதல் நேற்றுக்காலை 6 மணி வரை வல்வை இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

முச்சந்தி மேளி

அதுதான் சொல்லுறது. கண்டபடி பிரம்மன் கொஞ்சம் வைரமாய் கிறியிருந்தால் என்ன வந்தாலும் உயிர் போகாதெண்டு...!

எவ்வளவு உண்மை பாத்தியளே...!!

பஸ் சேவை வழமைக்கு

யாழ்ப்பாணம், ஏப். 27

கொழும்பு-யாழ் தனியார் பஸ் சேவைகள் நேற்று முதல் நடைபெறத் தொடங்கியுள்ளன. எனினும் பிரயாணிகள் எண்ணிக்கை குறையாகவே இருந்தது.

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்தும் ஊடரங்கு அமுலைடுத்தும் கொழும்பு – யாழ் போக்குவரத்துகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. (உ–10)

மட்டு நகரில் மக்கள் மீது சூடு

வீடு, கடைகள் தீக்கிரை

3 தமிழர் பலி; பலர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 27

கடந்த சனிக்கிழமையன்று மட்டுநகரில் பொதுமக்கள் மீது பாதுகாப்புப் படையினர் கண்டபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

படையினரின் இந்த அட்டகாசத்தில் மூன்று தமிழர்கள் பலியானார்கள். பலர் காயமடைந்தனர்

பொதுமக்களின் வீடுகளுக்கும் கடைகளுக்கும் தீ வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு பொலீஸ் நிலையம் மீது கிறனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலினால் பொலீஸ் நிலையத்துக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

அதன் பின்னர் ஆயுதப் படையினர் நகருக்கு வந்து கண்டபடி சுடத் தொடங்கினராம்.

வானங்களை சேதப்படுத்தினர் வீடுகள், கடைகளுக்குத் தீவைத்தனர்.

–இப்படி அறிவிக்கப்படுகிறது

இந்தச் சம்பவம் குறித்து மேலதிக தகவல் ஏதும் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை. (உ–எ)

ஹெலித்தாக்குதலில் தப்பிய குழந்தை!

பருத்தித்துறை, ஏப். 27

கற்கோளம் பகுதியில் ஹெலிக்கொப்டர் தாக்குதல் சம்பவம் ஒன்றில்போது 18 நாள் பச்சிளங் குழந்தை ஒன்று மயிரிழையில் தப்பியது

ஹெலிகொப்டர்தாக்குதலைடுத்து, இக் குழந்தையின் பெற்றோர் அவசரத்திலிருந்து குழந்தையை விட்டு விட்டு பதுங்குழியைத் தேடி ஓடினர்.

அவ்வேளை வானத்திலிருந்து வட்டமிட்ட ஹெலி பல தடவைகள் வேட்டுக் கண்டு தீர்த்தது. பல வேட்டுக்கள் குழந்தை படுத்திருந்த இடத்தைக் குழி விழுந்தன. ஆனால் தெய்வாதீனமாகக் குழந்தைமீது எந்த வேட்டுக்களும் படவில்லை. (உ–118)

துப்பாக்கிச் சூடு

27-04-1987
திங்கட்கிழமை
சுபநேரம்:–
11-59 முதல் 1-29 வரை
ராகுகாலம்:–
7-29 முதல் 8-59 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
அமாவாசை விரதம்

தும்பளை, முனைப்பகுதியில் மும்முனைத் தாக்குதல்

ஒருவர் பலி; கடற்படைப் படகு சேதம்

பருத்தித்துறை, ஏப் 27

சனிக்கிழமை இரவு 7 30 மணியளவில் சிறிய படகுகளில் ஆயுதங்கள் சகிதம் பருத்தித்துறை கற்கோளம், முனைப் பகுதியில் கரையிறங்க முயன்ற கடற்படையினர் மீது புலிகள் கடும் தாக்குதல் நிகழ்த்தினர்.

இந்தத் தாக்குதலை அடுத்து அரச படையினர் கற்கோளம், நெல்லண்டை, துப்பளைப் பகுதிகள் மீது மும்முனைத் தாக்குதல் தொடர்ந்தனர்.

ஹெலிகொப்டரிலிருந்தும், கடற்படையினரின் பீரங்கிக் கப்பல்களிலிருந்தும், பருத்தித்துறை முகாமிலிருந்தும் மும்முனைத் தாக்குதல்கள் நடந்தன

படையினரின் பீரங்கித் தாக்குதலில் கற்கோளத்தைச் சேர்ந்த ஆறுமுகம் செல்லையா (வயது 55) என்ற நபர் உயிரிழந்தார்.

தனது வீட்டில் உறவினர்களுடன் கதைத்துக் கொண்டிருந்த போது வீட்டு முற்றத்தில் விழுந்த ஷெல் குண்டுக்கு இவர் இலக்கானார்.

இந்தத் தாக்குதலில் வேறு சிலரும் காயமடைந்தனர்.

இதேவேளை கரையிறங்க முயன்ற படையினரின் படகு மீது புலிகள் ரொக்கட் லோஞ்சர் தாக்குதல் நடத்தியதாகவும் —

இந்த தாக்குதலில்படையினரின் படகு ஒன்று பெரும் சேதமுற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இந்தச் சம்பவத்தினால் சனி இரவு பருத்தித் துறைப் பகுதியில் பதற்றம் நிலவியது. (உ–160-118)

சிற்றூரில் தாக்குதல்

4 சிப்பாய்கள் பலி

யாழ்ப்பாணம், ஏப். 27

மூதூரில் உள்ள சிறிகளக் கிராமமான சிற்றூரில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கென நிறுத்தப்பட்ட சிப்பாய்கள்மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதில் நான்கு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

இதேவேளை இக்குகாவல் கடமையில் ஈடுபட்டிருக்கும் சிப்பாய்களை மாற்றுவதற்காக வேறு சிப்பாய்களை ஏற்றி வந்த லண்மீதும் புலிகள் நடத்திய தாக்குதலில் ஒருவர் பலியானதாகவும் 10 பேர் காயமடைந்ததாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் பற்றி வெகுஜனத் தொடர்பு நிலையம் விடுத்த அறிக்கையில் டீஸ் ஒன்றின்மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் பயணி ஒருவர் கொல்லப்பட்டதாகவும் நான்கு காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ–10)

காயமுற்ற சிறுவனும் மரணம்

யாழ்ப்பாணம், ஏப் 27

கடந்த வியாழனன்று நாயன்மார்கட்டுக்கு ஷெல் தாக்குதலுக்கு இலக்கானோரில் மற்றும் ஒரு சிறுவன் நேற்று மரணமானான்.

பிரேமதாஸ் சுவர்ஷன் (வயது 3) என்ற சிறுவனே மரணமானவனாவான்.

மேற்படி தாக்குதலின் போது இச்சிறுவனின் சகோதரரான பிரேமதாஸ் ஜஸ்மின் (வயது 5) கட்டட நாசுவர் கொல்லப்பட்டனர்.

இவர்களது தாயார் பிரேமதாஸ் மதியரசி காயமடைந்த நிலையில் தொடர்ந்தும் அறிவற்ற நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

உயிரிழந்த சிறுவர்களின் தந்தையான பிரேமதாஸ் மூன்று வருடங்களுக்கு முன் ஜேர்மனிக்கு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது (உ–10)

வடக்கு, கிழக்கில் உயிரிழந்தோருக்கு நஷ்டஈடு வழங்குக

மட்டு பிரசைகள் குழு கோரிக்கை

மட்டக்களப்பு, ஏப் 27

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உயிரிழந்த பொதுமக்களுக்கும் நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்–

–இப்படி மட்டக்களப்பு பிரசைகள் குழு, ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது

கந்தளாய் படுகொலைச் சம்பவம், புறக்கோட்டை பஸ் நிலையக் குண்டு வெடிப்புச் சம்பவம் ஆகியவற்றில் உயிரிழந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்க அரசு தீர்மானித்துள்ளது

–இத் திட்டத்தின்கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வன்செயல்களில் உயிரிழந்த பொதுமக்களின் உறவினர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் நஷ்டஈடு

(4 ஆம் பக்கம் பார்க்க)

கறுப்புப்பட்டி அணிவர்

யாழ்ப்பாணம், ஏப் 27

யாழ் ஆஸ்பத்திரி ஊழியர்கள் இன்று திரிபுபட்டி அணிந்தவாறு வேலைக்குச் செல்வர். கடந்த சனிக்கிழமை மாலை காங்கேசன்துறைப் பகுதியில் சிப்பாய்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ் ஆஸ்பத்திரி டாக்டர் திரு. விஸ்வரஞ்சனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவே இந்த நடவடிக்கை.

அஞ்சலிக் கூட்டம் ஒன்று இன்று காலை யாழ் ஆஸ்பத்திரியில் நடைபெறவுள்ளது. (உ–10)

திரிசாரணர்களுக்கும் அவசர அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சகல திரிசாரணர்களுக்கும் அவசர அழைப்பு விடுக்கப்பட்டது.

குண்டுவீச்சுச் சம்பவங்களின் போது பாதிக்கப்படும் பொதுமக்களுக்கு அவசர முதலுதவிகளை வழங்கும் பொருட்டு அவசர முதலுதவிப் பிரிவு ஒன்று நேற்று முதல் இயங்க ஆரம்பித்துள்ளது தெரிந்ததே.

இந்தப் பிரிவில் இணைந்து பணியாற்றுவதற்காக யாழ் மாநகர சபை ஆணையாளர் திரிசாரணர்களுக்கும் அவசர அழைப்பு விடுத்துள்ளார்.

திரிசாரணர்கள் ஆணையும் இன்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு நல்லூர் மகிழடிக்கரசி வித்தியாசாலைக்குத் தவறாது சமூகம் தருமாறு தலைப்புத் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (மற்றுமொரு செய்தி 2 ஆம் பக்கத்தில்) (உ–எ)

சிறுவர் முனையம் மூடியில் ஹெலிக்கொப்டர் தாக்குதல்

ஒரு சிறுவன் பலி; ஐவர் காயம்

பருத்தித்துறை, ஏப் 27

சனிக்கிழமை இரவு 7 30 மணியளவில் சிறிய படகுகளில் ஆயுதங்கள் சகிதம் பருத்தித்துறை கற்கோளம், முனைப் பகுதியில் கரையிறங்க முயன்ற கடற்படையினர் மீது புலிகள் கடும் தாக்குதல் நிகழ்த்தினர்.

இந்தத் தாக்குதலை அடுத்து அரச படையினர் கற்கோளம், நெல்லண்டை, துப்பளைப் பகுதிகள் மீது மும்முனைத் தாக்குதல் தொடர்ந்தனர்.

ஹெலிகொப்டரிலிருந்தும், கடற்படையினரின் பீரங்கிக் கப்பல்களிலிருந்தும், பருத்தித்துறை முகாமிலிருந்தும் மும்முனைத் தாக்குதல்கள் நடந்தன

படையினரின் பீரங்கித் தாக்குதலில் கற்கோளத்தைச் சேர்ந்த ஆறுமுகம் செல்லையா (வயது 55) என்ற நபர் உயிரிழந்தார்.

தனது வீட்டில் உறவினர்களுடன் கதைத்துக் கொண்டிருந்த போது வீட்டு முற்றத்தில் விழுந்த ஷெல் குண்டுக்கு இவர் இலக்கானார்.

இந்தத் தாக்குதலில் வேறு சிலரும் காயமடைந்தனர்.

இதேவேளை கரையிறங்க முயன்ற படையினரின் படகு மீது புலிகள் ரொக்கட் லோஞ்சர் தாக்குதல் நடத்தியதாகவும் —

இந்த தாக்குதலில்படையினரின் படகு ஒன்று பெரும் சேதமுற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இந்தச் சம்பவத்தினால் சனி இரவு பருத்தித் துறைப் பகுதியில் பதற்றம் நிலவியது. (உ–160-118)

பத்துத் தினங்களில் 122 படையினர் பலி!

கொழும்பு, ஏப் 27

கடந்த பத்துத் தினங்களில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் 122 ஆயுதப்படையினர் உயிரிழந்தனர் என்ற அறிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் காங்கேசன்துறை மல்லாகம் மீது நடத்திய தாக்குதலில் 20 படையினரும்,–

புக்மோட்டையில் புலிகள் நடத்திய தரைக் கண்ணி வெடித் தாக்குதலில் 14 படையினரும்,–

வந்தாறுமூலையில் புலிகள் நடத்திய தாக்குதலில் 15 படையினரும்,–

கடந்த வெள்ளி சிற்றூரில் புலிகளின் தாக்குதலில் நான்கு சிப்பாய்களும்,–

நேற்று மூதூர் கட்டைபறிச்சானில் கண்ணிவெடிக்கு இலக்காகி எட்டுச் சிப்பாய்களும் உயிரிழந்தனர்.

வந்தாறுமூலைக்கு அருகே பெரியவெள்ளிக்கிழமை அன்று பஸ்மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களில் 61 பேர் படையினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எல்லாமாக பத்துத் தினங்களிலும் 122 படையினர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது (உ–எ)

இலங்கை இனப்பிரச்சினை குறித்து

இந்தியாவின் நிலைப்பாடு ராஜீவ் வெளியிடுவார்

இன்று ஆரம்பமாகும் லோகசபைக் கூட்டத்தில்

புதுடில்லி, ஏப். 27

இலங்கை இனப்பிரச்சினை பற்றிய இந்தியாவின் புதிய நிலைப்பாடு இன்று மீண்டும் ஆரம்பமாகும் லோகசபைக் கூட்டத்தில் போது இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியால் வெளியிடப்படும்.

இப்படி புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

மோசமடைந்து வரும் இலங்கை வன்செயல்கள், இலங்கைப் பிரதமர் பிரேமதாஸா இந்தியாவுக்கு எதிராக தெரிவித்த கருத்துக்கள் ஆகியவை பற்றி இந்திய வெளியுறவு அமைச்சர் நாடாளுமன்ற ஆலோசனைக்குழு கடந்த சனிக்கிழமை மாலை கூடிப் பரிசீலனை செய்தது.

பிரதமர் ராஜீவ் காந்தி கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். பல சிரேஷ்ட அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் இலங்கை அரசின் நிலை குறித்து வெளிவிவகார அமைச்சர் ஆர்.காகிக்[பிரதமருக்கு விளக்கினார்.

இதனிடையில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் இருந்து முக்கிய தகவல் ஒன்று கிடைத்ததாக அரசு எதிர்பார்த்து இருப்பதாகவும் தெரியவருகின்றது

லோக்சபா இன்று திங்கள் மீண்டும் கூடுகின்றது.

இந்தக் கூட்டத்தொடரின் போது பிரதமர் காந்தி இனப்பிரச்சினை குறித்து இந்தியாவின் புதிய நிலைப்பாட்டை வெளியிடக் கூடும் என்று புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன

புதுடில்லியில் பிரதமர் காந்தியைச் சந்தித்து விட்டு சென்னை திரும்பிய வையோடு தமிழ் நாடு சட்டசபையில் இலங்கை பிரச்சினை குறித்து முழு

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ் சிறு விளம்பரங்கள் ★

விற்பனைக்கு

கோழி இறைச்சி (புரோலர்ஸ்) விற்பனைக்கு உண்டு. எஸ். செல்வராசா கைக்கிறேஷ். கே. கே. எஸ். வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில். (1231)

ஒட்டுசுட்டான் ராணுவ முகாம் பலப்படுத்தப்படுகிறது

ஹெலி மூலம் சிப்பாய்கள் குவிப்பு

முல்லைத்தீவு, ஏப். 27

கடந்தவாரம் ஒட்டுசுட்டான் இராணுவ முகாமில் நடைபெற்ற தாக்குதலைத் தொடர்ந்து அந்த முகாம் பலப்படுத்தப்படுகின்றது.

தாக்குதலில் விலவுகளை இராணுவ உயர் அதிகாரி ஒருவர் நேரில் வந்து பார்வையிட்டார். அவரது விஜயத்தைத் தொடர்ந்து சிப்பாய்கள் 4 ஹெலிகள் மூலம் முகாமுக்குக் கொண்டுவரப்பட்டனர். பாரிய பெட்டிகளும் கொண்டுவந்து இறக்கப்பட்டன.

அப்பெட்டிகளுள் ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இராணுவ உயர் அதிகாரிகள் விஜயத்தின் போது ஆயுதப் படையினர் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக முத்தையன் கட்டு வீதி மேட்டிலும், கச்சிமடு வீதி முதலாம்கட்டை படியிலும், தாக்குதலுக்கு ரிஸ்வார் ஆலயச் சந்தியிலும் செல்றி நின்றனர். (இ-ள-98)

அடிக்கடி மின்வெட்டு

கொடிகாமம், ஏப். 27

சிலநாட்களாக கொடிகாமப் பகுதியில் அடிக்கடி மின்சார வெட்டு ஏற்படுவதாய் புகார் தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் தட்டுப்பாடான இவ்வேளையில் மின்வெட்டு அடிக்கடி ஏற்படுவது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவித்திருக்கிறார்கள். (உ-75)

ஹெலிக்குப் பயந்து வீதி விளக்குகளை நொருக்குகிறார்களாம்

யாழ்ப்பாணம், ஏப். 27

ஹெலிக்கொப்டர் நாக்குதலுக்குப் பயந்த சிலர் வீதி விளக்குகளை அடித்து நொருக்குகிறார்களாம்.

இரவு வேளையில் வரும் ஹெலிகொப்டர்கள், வெளிச்சம் அதிகமாக உள்ள பகுதிகளை நோக்கித் தாக்குதல் நடத்துவதன் காரணமாகவே வீதி விளக்குகள் நொருக்கப்படுகின்றனவாம் வேண்டுமாம். வீதி விளக்குகளை ஆங்காங்கு விடலாமே என்று பலரும் கவலை தெரிவித்திருக்கிறார்கள்.

கல்லியங்காடு நல்லூர்ப் பகுதிகளிலேயே இப்படியான சம்பவங்கள் இடம்பெறுகின்றன (இ 10)

கவிஞர்கள் - எழுத்தாளர் சகல நூல்களையும் படிக்கவேண்டும்

'மல்லிகைக் கவிதைகள்' அறிமுக விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஏப். 27

சகல பழைய, புதிய நாலாமொழி, மொழி பெயர்ப்பு நூல்களையும் கவிஞர்களும் எழுத்தாளர்களும் அவசியம் படித்தறிய வேண்டும்.

கவிஞர் சோ. பத்மநாதன் இவ்வாறு கூறினார்.

மல்லிகைப் பந்தலின் நான்காவது வெளியீடான 'மல்லிகைக் கவிதைகள்' நூல் அறிமுக விழா சனிக்கிழமை நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்றது.

விழாவில் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்; இன்றைய கவிஞர்களுக்கு சொற்பஞ்சம் ஏற்படுகின்றது. அவர்கள் பழைய நூல்களைப் படிப்பதன் மூலம் அக்குறையை நிவர்த்தி செய்யலாம்.

தங்களின் அரசியல்வாதி ஆகும். ஓவியம், சிற்பம் என்பன முப்பரிமாணத்துக்குள்ளும், சங்கீதம் 7 சுரங்களுக்குள்ளும் அடங்கிவிடும்.

ஆனால் கவிதை அப்படியல்ல ஒரு சொல்லுக்குரிய பொருள் எப்படிப் பன்முகப்படுத்தப்படுகின்றதோ அதேபோல் கவிதையும் பல பொருள்களைக் காட்டும்.

காணுவதைக் காட்டி, கருதாததைக் கருதப் பண்ணுவதே கவிதை என்றார்.

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா உரை நாற்றுகையில்:-

மல்லிகையில் வெளிவந்த கவிதைகளில், 51 கவிஞர்களின் கவிதைகள் இத்தொகுப்பில் வெளியிடப்பட்டுள்ளன.

கவிஞர்கள் நிலைப்பதைச் செய்யவேண்டும், செய்யக்கூடியதை நினைக்கவேண்டும் என்றார்.

கவிஞர் எழுத்து இ. ஜெயராஜ் உரையாற்றுகையில் இன்று நாம் கவிஞர் கவிதை பெயர்பட்டியலைக் கூறும்போது கம்பன், இளங்கோ... பாரதி... பாரதிதாசன்... கண்ணதாசன், வைரமுத்து என்று சொல்கிறோம்.

ஏன் ஒரு இலங்கைத் தமிழ் கவிஞனின் பெயரை சேர்க்க முடியவில்லை.

எனவே நாமும் ஒர் உலகளாவிய தமிழ் கவிஞனை உருவாக்க முனைய வேண்டும் என்றார்.

தலைமறைவான யுவதிகள் சுகமாக இருக்கிறார்களாம்

கொழும்பு, ஏப். 27

கண்டி மாவட்டத்தில் அண்மையில் தலைமறைவான 60க்கு அதிகமான சிங்கள யுவதிகள் தாங்கள் சுகமே இருப்பதாக பெற்றோர்களுக்குத் தகவல் அனுப்பியிருக்கிறார்கள்.

எனினும், எவருடன் தங்கி இருப்பதாக அவர்கள் பெற்றோர்களுக்கு அனுப்பிய கடிதங்களில் தெரிவிக்கவில்லை.

தலைமறைவான யுவதிகள் பற்றிய விசாரணைகளை பொலீஸார் தீவிரப்படுத்தி உள்ளனர் யுவதிகள் தலைமறைவானது குறித்து அவர்களின் பெற்றோர்கள் பொலீஸாருக்கு முறைப்பாடு எதையும் தெரிவிக்கவில்லை.

இப்படி வெளிநாட்டு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-ஐ-எ)

நேபாம் குண்டு அல்ல; றப்பர் குண்டு தானாம்!

அத்துலத் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 27

யாழ் குடாநாட்டில் நேபாம் குண்டு போடவில்லை; றப்பர் குண்டு தான் போடுகிறோம்.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார் என்று வெரிற்றாஸ் வானொலி நேற்று அறிவித்தது.

இவர்கள் அரசப்படை நடத்தும் விமானத் தாக்குதலில் நேபாம் குண்டு வீசப்படுவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அமைச்சர் லலித் அத்துலத்முதலி இக்குற்றச்சாட்டை மறுத்தார்.

றப்பர் குண்டு தான் வடபகுதி விமானத் தாக்குதலில் போது பாவிக்கப்படுகிறது

இக்குண்டு 50 கிலோ எடை கொண்டது. ஒர் பிப்பாய் அளவு கனமானது.

இந்த றப்பர் குண்டு ஓர் இடத்தில் போட்டால் ஊடுருவி உள்ளே சென்று பின்னர் தான் வெடிக்கும்

இப்படி அமைச்சர் சொன்னார்.

நேபாம் குண்டு ஒரு இடத்தில் போடப்பட்டு வெடித்தால் அந்த இடத்தில் எரிவலான பகுதி தீப் பிடிக்கும். உயிர்ச் சேதத்துடன் உடைமைகளும் பெருமளவில் சேதமாகும்.

விலட்நாம் யுத்தத்தில் அமெரிக்கா நேபாம் குண்டுகளைத் தான் வீசியது

இப்படி வெரிற்றாஸ் வானொலி மேலும் தெரிவித்தது (இ-ஏ)

மாநிலம் மாவட்டம் உள்ளூர்

எமது மூலவளங்களில் முக்கியமானது பனைவளம்

யாழ்ப்பாணம், ஏப். 27

எமது பிரதேசத்தில் மூலவளங்களில் மிக முக்கியமானது பனைவளம். இதனைப் பாதுகாத்து பனைப் பொருள் உற்பத்தியில் ஈடுபடுவோரை பயன்பெறச் செய்ய வேண்டியது எமது கடமையாகும் ஆகும்.

பனை அபிவிருத்திச் சபையின் முணிப்பாளர் திரு. எஸ். பாலசிங்கம் இவ்வாறு கூறினார்.

தீவுப்பகுதியில் பனை வளஅபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். எஸ் ஜீவரத்தினம் தலைமையில் நடைபெற்ற பொழுது அவர் இவ்வாறு கூறினார்.

பிரதேசக் குழுச்செயலாளர் திரு. எஸ். நாகராஜா உரையாற்றுகையில்;

பனம்பொருள் உற்பத்திகளில் ஈடுபடும் மக்கள் பயன் பெறத்தக்க புதிய வழிவகைகள் காணப்படவேண்டும்.

இதுவரை பனைவளர்ப்போருக்கோ பனந்தோப்புச் சொந்தக்காரருக்கோ எந்த விதமான பயனும் பெறத்தக்க காரணி இருக்கவில்லை.

இன்று அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகிறோம் என்றார்.

பனை அபிவிருத்திச் சபையின் உதவி உற்பத்தி உத்தியோகத்தர் திரு. வி. ஜி. தங்கவேல் உரையாற்றுகையில்—

இன்றைய எமது நிலையில் நாம் பொருளாதாரச் சுதந்திரம் பெறவும், பட்டினிச் சாவிலிருந்து மக்களைப் பாதுகாக்கவும் எமது பனைவளம் பேணப்படவேண்டியதொன்றாகும் என்றார்.

கருத்தரங்கில் விசேட சேவை உத்தியோகத்தர்கள், கிராமசேவை அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அன்புவழிபுரம் இளைஞர் மரணம்: பலர் விசாரணை

அன்புவழி புரத்தைச் சேர்ந்த நடராசா சுதாஹரனின் மரணம் தொடர்பாக திருகோணமலை பொலீஸார் பலரை விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்.

விசாரணையின் பின்னர் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

18 வயதான இந்த இளைஞர் செல்வநாயகபுரத்தில் வைத்து இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினால் சுட்டுக்கொல்லப்பட்டார் கடந்த பத்தாம் திகதி இச்சம்பவம் இடம் பெற்றது. இறந்த இளைஞரின் உடலில் பத்துக்கு மேற்பட்ட சூட்டுக்காயங்கள் காணப்பட்டன.

மரண விசாரணையின் பின்னர் கொலைச்சம்பவம் என்று பதிவு நீதிவான் திரு. எம். கே. செல்லராசா தீர்ப்பளித்தார். (இ-எ-150)

கைதிகளை விடுவிக்குமாறு மனித உரிமைகள் பாதுகாப்பு ஒன்றியம் கோரிக்கை

சென்னை, ஏப் 27

ஸ்ரீலங்காச் சிறைகளில் சாகும் வரை உண்ணாவிரதப் போரை மேற்கொண்டு உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி இலங்கை மனித உரிமைகள் பாதுகாப்பு ஒன்றியம் அறிக்கை விடுத்துள்ளது

18 மாதங்களுக்கு இருந்த 40 மாதங்கள் வரை ஸ்ரீலங்கா வதை முகாம்களில் நடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளை விடுதலை செய்யவும் விசாரணை செய்யவும் கோரி வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருக்கும் தமிழ் பேசும் அரசியல் கைதிகள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இச்சாகும் வரை உண்ணாவிரதம் உலக அரங்கில் ஸ்ரீலங்கா அரசானது குண்டு ஒன்றும் [illegible] மனித உரிமை மீறல்கள் [illegible] முழு அளவில் காட்டவல்லது.

சிறையில் தாக்கி இப்போராட்டம் முன் எடுக்கப்பட்டாலும் ஸ்ரீலங்காவின் ஏனைய இராணுவ முகாம்களில் ஆயிரக்கணக்கான கைதிகள் குரல் கொடுக்க முடியாவண்ணம் துப்பாக்கி முனையில் அடக்கப்பட்டு உள்ளனர்.

ஆயினும் இந்த அடக்குமுறைகளையும் மீறி பல முகாம்களில் இருந்தும் ஏற்கனவே கைதிகளின் குரல்கள் ஒங்கி ஒலித்ததை நாம் அறிவோம்.

இன்று வெலிக்கடைச் சிறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்போராட்டம் தீவிரமடையும் வகை செய்யப்பட்ட ஐயாயிரத்துக்கு மேற்பட்ட கைதிகளின் ஆன்மக் கொந்தளிப்பே ஆகும்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-எ)

இரசாயன பகுப்பாய்வாளர் பரிசோதனை

கொழும்பு, ஏப். 27

புறக்கோட்டை பஸ் நிலையத்தில் குண்டு வெடித்தவிடத்தை அரச இரசாயன பகுப்பாய்வாளர்கள் சோதனையிட்டனர்.

அரச பஸ் நிலையத்துக்கும் தனியார் பஸ் நிலையத்திற்கும் இடையில் வாகனம் ஒன்றில் வைக்கப்பட்ட குண்டே வெடித்தது என்று பரிசோதனையில் தெரியவந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

[illegible] குண்டு [illegible] விக்கப்பட்டதவறான அரச நிராகரித்துவிட்ட [illegible]

சேவாச்சிரமம் உதவும்

பொம்மரத் தாக்குதலில் [illegible] கணவரை இழந்த [illegible] குடும்பத்தலைவர்களுக்கு சாரதா சேவாச்சிரமம் உடனடி நிவாரணம் [illegible]

அன்புவழிபுரம் முக்கியஸ்தர் கொலை

அன்புவழிபுரம் முக்கியஸ்தர் கிருஷ்ணமூர்த்தி [illegible] கொலை செய்யப்பட்டார் [illegible] ஆயுதப் படையினர் [illegible] கொலை [illegible] ஆயுதப் படையினர் [illegible] கொலை [illegible] ஆயுதப் படையினர் [illegible] கொலை

உதயன்
இல.15,1ஆவதுஒழுங்கை கொழும்பு-14. தொலைபேசி: 24805
மின்சார நிலையம் 22078
வாரம்மூன்றுக்கு 27-04-1987 த.பெ.இல. 83

உதய சங்கற்பம்

பேராசை மனிதனைப் பாழ்படுத்துகின்றது நமக்குத் துன்பங்களை உண்டாக்குபவர் நாமே.

— சுவாமி சித்பவானந்தர்

நல்ல தருணம் இது

மாமடிக்கிடாரே மச்சான் மாட்டிக்கிட்டாரே!

சுவை தரும்பும் இந்தப் பாடல் அடிக்கடி ஒரு பிரமுகருக்குப் பொருந்துகிறது; பொருந்தும் விதத்தில் அவரது நாக்குச் சதி செய்து வருகிறது. பாவம்!

அந்தப் பிரமுகர் வேறு யாருமில்லை. ஸ்ரீலங்காவின் பிரதமரும், 'சர்வதேச விடுதலைப் புலிகளின் நல்லெதிரியுமான நர வல்லமை' பொருந்திய திரு ஆர். பிரேமதாச தான்.

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர்" சொல்லிமுடிக்கப் படுமோ? என்ற வள்ளுவ வாக்குப்படி அவர் நடந்து கொள்கிறார். அதாவது நாவைக் காக்கத் தெரியாமல் இழுக்குப்படுகிறார்; இடக்குப்படவும் செய்கிறார்.

அடிக்கடி இந்தியா மீது ஆத்திரப்படுகிறார். ஆத்திரத்தில் புத்தி மந்தமாகி நாவைக் காக்கத் தவறிவிடுகிறார்.

1983 ஆம் ஆண்டு தொடக்கம், அதாவது தமிழர் பிரச்சினை உச்சத்துக்கு வந்த தொடக்கம், அவருக்கு இந்தியா என்றதும் 'அலர்ஜி' ஏற்பட்டு விடுகிறது. இந்த நாள் புத்தாண்டுச் சிறப்பாக அடிக்கடி இந்தியா மீது வசைபாடுகிறார்.

இனப்பிரச்சினை விடயத்தில் அவர் அதிகமாக, அல்லது அடிக்கடி அலட்டிக் கொள்வதில்லை. ஆனால் அது குறித்து ஏதாவது பேச வேண்டும் என்றால் இந்தியாவை இழுத்து அதன் அவமதிக்கும் விதத்தில், அதற்கு ஆத்திரம் ஊட்டும் விதத்தில் வார்த்தைகளை அளக்காது உளறிவிடுகிறார்.

பௌத்த மத தத்துவங்களில் துறை தேர்ந்தவர் போன்ற பேச்சுக்களை நிகழ்த்தும் அவர், பௌத்தம் இந்தியாவில் இருந்து தான் இலங்கைக்கு வந்தது என்பதை மறந்து விடுகிறார். தமது சிங்கள இனத்தின் வரலாறும் இந்தியாவிலிருந்து தான் வந்தது என்பதும் அவருக்கு அடியோடு மறந்து போகிறது.

இனப்பிரச்சினை குறித்துப் பேச நினைக்கும் போது இந்தியா மீது கல்லெறிவதே அவரது முதல் நோக்கமாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. பல பண்பாடுகள், கலாசாரங்கள், நாகரிகங்கள், அரசியல் முறைகள், விஞ்ஞானம், அரசியல் நாகரிகங்கள் என்பனவற்றின் தொட்டில் இந்தியாவே என்பதை அவர் நினைத்துக் கொள்வதாகத் தெரியவில்லை. வேறு எதைத்தான் மறந்து போனாலும், பிரிட்டிஷாரிடம் இருந்து இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தன் பக்க விளைவாகவே ஸ்ரீலங்காவுக்கும் சுதந்திரம் கிடைத்தது என்பதையும் அவர் மறந்து போகிறார்.

இந்தியா யார் எதை விடயத்தில் நல்ல போட்டி? தமிழர்களுக்கு அது ஏன் உதவ வேண்டும்? எமது விவகாரத்தை நாமே கையாளுவோம்– இவ்வாறான கருத்துக்களை திரு பிரேமதாச கூறி வந்தது உண்டு. இந்தியா மீது வன்மம் கொண்டிருந்ததிலேயே அவர் நாடாளுமன்றத்தில் உள்ளேயும் வெளியேயும் பேசி வந்திருக்கிறார்.

ஹராரேயில் போய் இந்தியாவிடம் முன்னிலையில் விக்கும் விதத்தில் பேசி, மூக்குடைபட்டவர்; மாட்டுப்பட்டவர்; முட்டுப்பட்டவர் இவர்.

மீண்டும் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் இந்தியாவை ஸ்ரீலங்காவின் சத்துராதி என்று சொல்லாமல் சொல்லி பெரும் சர்ச்சையைக் கிளப்பி இருக்கிறார்.

இனப்பிரச்சினையில் இந்தியா மத்தியஸ்தராக விளங்குவதற்கு ஸ்ரீலங்கா ஒப்புதல் கொடுத்தது. அதனால்தான் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை ஸ்ரீலங்கா இழுத்தடித்து வந்த போதிலும் எப்படியும் அரசியல் ரீதியாகச் சமாதானத் தீர்வு காணவேண்டும் என்று இந்தியா எவ்வளவு நல்ல நல்லெண்ணத்தைப் பயன்படுத்தி வருகிறது.

ஒருவரை மத்தியஸ்தராக அழைத்துவிட்டு அவரைச் சத்திராதி என்று கூறுவது சேகப்படிட காரியம் அல்ல. அதுவும் ஒரு நாட்டின் பிரதமர், மற்றொரு நாட்டின் மீது அவ்வாறு குற்றம் சாட்டுவது மிகவும் பாரதூரமான ஒன்றாகும்.

இந்தியாவின் மத்தியஸ்தத்தை பகிரங்கமாக ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஆனால் பிரதமரோ அதனைத் தவிர்த்தும் விதத்தில் அவமதிக்கிறார். இது என்ன வேடிக்கை! குருவுக்கு மிஞ்சிய சீடர்!!

அவர்கள் இருக்கட்டும்—

இனப்பிரச்சினை விடயத்தில் தமிழருக்குச் சாதகமாக எதையும் செய்வதற்கு இந்தியாவுக்கு இதுவே நல்ல தருணம் ஸ்ரீலங்காவின் சத்துராதி என அதற்கு நாமம் சூட்டப்பட்டாயிற்று. அதே வாயால் பெற்றாலும் உண்மையில் அவ்வாறு கருவதாகவே கொள்ளப்படுதல் வேண்டும்.

இந்தியா இனியும் மத்தியஸ்தராக இருக்க நியாயமில்லை. உண்மையாகவே ஸ்ரீலங்காவின் சத்துராதியாகவும் தமிழர்களின் ஆபத்பாந்தவராகவும் அது மாற வேண்டும்.

வாளாத் தாக்குதல் நடத்தி தமிழ் மக்களை ஸ்ரீலங்கா அரசு கொன்று குவிக்கிறது. ஈழத் தமிழரைக் காப்பாற்ற இந்தியாவுக்கு இது நல்ல தருணம். இதனை நழுவவிடக்கூடாது.

தமிழரைக் காப்பாற்ற இந்தியா இப்போதும் உருப்படியாக எதுவும் செய்யாமல் இருப்பின் இனிமேல் வேறு சரியான சந்தர்ப்பம் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. உதவி உரிய நேரத்தில் தேவை. இல்லையேல் ஸ்ரீலங்கா அரசோடு சேர்ந்து ஈழத் தமிழர்களை அழித்தொழிந்த பாவம் இந்தியாவையும் ஒட்டிக்கொள்ளும்.

தமிழர் விடுதலையில் இன்று நடந்துகொண்டிருக்கும் விவாதம் அதற்கு இடம் கொடுக்காமல் தமிழ் புதிய தேசியக்கூட்டணி அமையப்படவேண்டும் என்று முதலமைச்சர்கள் கருத்து வெளியிட்டனர்.

எதிர்வரும் இந்திய ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது குறித்தும் இவர்கள் ஆராய்ந்தனர்.

மீண்டும் ஜூன் மாதத்தில் பெங்களூர் அல்லது புதுடில்லியில் முதலமைச்சர்கள் மாநாட்டை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

சனிக்கிழமை நடந்த கூட்டத்துக்கு மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதிபாசுதலைமைவகித்தார்.

கேரளம், திரிபுரா, ஆந்திரா, கன்னடம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். (இ-எ)

இ.காங்கிரஸுக்கு எதிராக மாற்றுத் தேசிய கட்சி

6 மாநில முதலமைச்சர்கள் புதுடில்லியில் கூடி ஆராய்வு

புதுடில்லி, ஏப். 26

ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு மாற்றாக புதிய தேசியக்கட்சி ஒன்றை அமைப்பது குறித்து ஆறு மாநில முதலமைச்சர்கள் கூடி ஆராய்ந்தனர்.

காங்கிரஸ் அல்லாத கட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஆறுமாநிலங்களின் முதலமைச்சர்கள் சனிக்கிழமை புதுடில்லியில் மாநாடு ஒன்றை நடத்தினர்.

அந்த மாநாட்டிலேயே இதுபற்றி ஆராயப்பட்டது.

சார்த்திருக்கும் கட்சிகளின் தனித் தன்மைக்கு பங்கம் ஏற்படாத விதத்தில் புதிய தேசியக்கட்சி அமையப்படவேண்டும் என்று முதலமைச்சர்கள் கருத்து வெளியிட்டனர்.

எதிர்வரும் இந்திய ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது குறித்தும் இவர்கள் ஆராய்ந்தனர்.

மீண்டும் ஜூன் மாதத்தில் பெங்களூர் அல்லது புதுடில்லியில் முதலமைச்சர்கள் மாநாட்டை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

சனிக்கிழமை நடந்த கூட்டத்துக்கு மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதிபாசுதலைமைவகித்தார்.

கேரளம், திரிபுரா, ஆந்திரா, கன்னடம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். (இ-எ)

இலங்கைத் தமிழர் படுகொலை

தமிழக சட்டசபை இன்று விவாதிக்கும்

சென்னை, ஏப் 27

இலங்கைத் தமிழர் படுகொலை பற்றி தமிழ்நாடு சட்டசபை இன்று திங்கட்கிழமை முழு அளவான விவாதம் ஒன்றை நடத்தும்.

நிதி அமைச்சரும் சபை முதல்வருமான திரு. வீரா. நெடுஞ்செழியன் சபையில் இதனை சனிக்கிழமை அறிவித்தார்.

சபையில் அலுவல்கள் கமிட்டி இந்த தீர்மானத்தை எடுத்து இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

விவாதத்தை நடத்துவதற்கு ஏதுவாக வேலை நேரம், கலைசர்ப்பு நேரம் ஆகியன நீக்கம் இருக்கமாட்டாது என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. (இ-எ)

உயிரிழப்பு 20 ஆக உயர்வு

கராச்சி, ஏப்ரல் 26

கராச்சியில் அண்மையில் நடந்த இனவாதக் கலவரங்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்தது.

ஐந்து தினங்கள் இடம் பெற்ற மோதல்களிலேயே இவர்கள் உயிரிழந்தனர். (இ-எ)

இஸ்வெஸ்தியா ஆலோசனை

மாஸ்கோ, ஏப்ரல் 26

மேற்கு நாடுகளின் வானொலி ஒலிபரப்புக்களை குறுக்கீடு செய்து தடை செய்யும் வழக்கத்தை ரஷ்யா கைவிட வேண்டும்.

இப்படி ரஷ்ய அரசு பத்திரிகையான இஸ்வெஸ்தியா கேட்டுள்ளது.

மேற்கு நாடுகளின் ஒலிபரப்புக்களை ரஷ்யர்கள் கேட்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்றும் அப்பத்திரிகை எழுதியிருக்கிறது. (இ-எ)

சாம்பியாவினுள் புகுந்து தென்ஆபிரிக்கா 6 போராளிகளைக் கொன்றது

ஜோஹன்னஸ்பர்க், ஏப். 26

தென்ஆபிரிக்கத் துருப்புக்கள் சனிக்கிழமை சாம்பியா நாட்டினுள் புகுந்து ஆறுபேரைக் கொன்றன.

இவர்கள் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் போராளிகள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்க அரசுத் துருப்புக்கள், சாம்பியாவினுள் காங்கிரஸின் முகாம் ஒன்றைத் தாக்கியபோதே இவர்கள் கொல்லப்பட்டனர். (இ-எ)

சீக்கிய ஆலயம் பள்ளிவாசலாக மாற்றப்பட மாட்டாதாம்

தூதுக்குழுவுக்கு ஸியா உறுதி

அமிர்தசரஸ், ஏப்ரல் 26

பாகிஸ்தானில் உள்ள சீக்கிய ஆலயம் ஒன்றை பள்ளிவாசலாக மாற்றுவதற்கு இடமளிக்க மாட்டேன் என்று ஜனாதிபதி ஸியா உல் ஹக் உறுதியளித்தார்.

இந்தியாவில் இருந்து சென்ற சீக்கியத் தூதுக் குழுவுக்கு இந்த உறுதி மொழி அளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீக்கிய ஆலயத்தை பள்ளிவாசலாக மாற்றும்படி பாகிஸ்தானில் உள்ள முஸ்லிம்கள் வற்புறுத்தி வருகிறார்கள் எங்கு குறிப்பிடத்தக்கது. (இ-எ)

விபத்தில் 60 பேர் பலி

இஸ்லாமாபாத், ஏப். 26

பாகிஸ்தானின் பலன்பூர் நகரில் கடந்த சனியன்று இரண்டு பேரூந்துகள் மோதி விபத்துக்குள்ளானதில் 60 பேர் பலியானார்கள். பலர் படுகாயமடைந்தனர்.

திருமணம் ஒன்றிற்குச் சென்றுவிட்டுத் திரும்பியவர்களின் பேரூந்தே விபத்துக்குள்ளானது. (உ)

அரபாத் மீண்டும் தெரிவு

லண்டன், ஏப் 26

பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்தின் தலைவராக யாஸீர் அரபாத் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

அல்ஜீரியாவில் சனியன்று நடைபெற்ற பலஸ்தீன தேசியசபைக் கூட்டத்தில் அவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த ஆண்டு இக் கூட்டத்தைப் புறக்கணித்த பல குழுக்கள் இம்முறை கூட்டத்தில் கலந்து கொண்டன (உ)

ரஷ்ய ராஜதந்திரி வெளியேற்றம்

வாஷிங்டன், ஏப் 26

ரஷ்ய ராஜதந்திரி ஒருவரை நியூஸிலாந்து அரசு வெளியேற்றியது.

ரஷ்யத் தூதரகத்தில் பணியாற்றிய இந்த ராஜதந்திரி ரஷ்ய உளவு ஸ்தாபனமான கே.ஜி.பி. ஏஜண்ட் என்று நியூஸிலாந்து குற்றம் சாட்டியது.

பிரதமர் டேவிட் லாங்கே இது பற்றி அறிக்கை ஒன்றை விடுத்தார். (இ-எ)

உலகில்

ஒலிம்பிக் போட்டி: பகிஷ்கரிப்பை தடுக்க மீண்டும் முயற்சி

பெர்ன், ஏப். 26

தென் கொரிய தலைநகர் சோலில் 1988 இல் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளை கம்யூனிஸ்ட் நாடுகள் பகிஷ்கரிக்காமல் தடுப்பதற்கான பேச்சுக்களை மீண்டும் எதிர்வரும் ஜூன் மாதத்தில் நடைபெறவுள்ளன.

கலிஸ் தலைநகரில் நடைபெறும் இப்பேச்சுக்களில் தென்கொரிய, வடகொரிய அரச அதிகாரிகள் பங்குபற்றுவர்.

சமரசம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக ஒலிம்பிக் போட்டிகளில் சில வற்றை வடகொரியத் தலைநகரிலும் நடத்த தென் கொரிய ஒலிம்பிக் கமிட்டி முன்வந்துள்ளது

டேபிள் டெனிஸ், 100 கிலோ மீட்டர், சைக்கிள் ஓட்டப் பந்தயம், கிற்போட்டி ஆகியவற்றையே வடகொரியாவில் நடத்த தென் கொரியா அனுமதிக்கிறது

"இதற்கு மேல் தென் கொரியா அனுமதிக்காது' இப்படி தென் கொரிய ஒலிம்பிக்கமிட்டித் தலைவர் தெரிவித்தார். (இ-எ)

ரஷ்ய தூதுவர் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறினார்

மாஸ்கோ, ஏப்ரல் 26

ஆப்கானிஸ்தானிலிருந்து ரஷ்ய தூதுவர் வெளியேறினார்.

ஆப்கானிஸ்தானிலிருந்து ரஷ்ய தூதுவர் வெளியேறியதாக மாஸ்கோ வானொலி அறிவித்தது.

ஆப்கானிஸ்தானிலிருந்து ரஷ்ய தூதுவர் வெளியேறியதாக ஆப்கானிஸ்தான் அரசு அறிவித்தது.

ஹாபர்வியூ மினிமுகாம் தாக்குதல்:

அனைத்தையும் இழந்த நிலையில் பலாலி வாழ் தொழிலாளர்கள்

யாழ்ப்பாணம், ஏப். 27

ஹபர்வியூ மினிமுகாம் தாக்கப்பட்ட தினத்தில் காங்கேசன் துறைமுகத்தில் கடமை ஆற்றிய பலாலியைச் சேர்ந்த 25 (கூலித்) தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட அவல நிலை குறித்து பலாலி பிரதேசக் குழு பின் வருமாறு தெரிவிக்கிறது.

கடந்த புதன்கிழமை அதிகாலை 1.30 மணி அளவில் காங்கேசன் துறைமுகத்தில் அரம்பமிதம் நடந்து கொண்டிருந்த சமயம் பலாலியைச் சேர்ந்த 25(கூலித்) தொழிலாளர்கள் தங்கள் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அச்சமயம் செய்வது அறியாது தமது உயிரைப் பாதுகாப்பதற்காக தரங்கள் வேலை செய்து கொண்டிருந்த இடத்திற்கு கண்மயில் நின்ற கப்பலில் ஏறி புகலிடம் தேடினர்.

அவர்களுடைய கப்பலை மாலுமி நடுக்கடலுக்கு எடுத்துச் சென்று காலை 11.00 மணி அளவில் மீண்டும் துறைமுகத்துக்கு அவர்களைக் கொண்டுவந்து இறக்கி இராணுவ அதிகாரியிடம் ஒப்படைத்தார்.

அதன் பின் இராணுவத்தினர் அவர்களை பலமுறத்தியும் துன்புறுத்தியும் அவர்களைக் கொண்டு தங்கள் வேலைகளையும் செய்வித்து மாலை 4.00 அளவில் விடுவித்தனர்.

ஆனால் இந்த 25 தொழிலாளர்களின் தேசிய அடையாள அட்டைகள், துறைமுக வேலை வழங்கல் புத்தகங்கள் துறைமுக ஏஜெண்டியான ஜெயபாலசிங்கம் கம்பனியால் எடுக்கப்பட்ட இலக்கை வங்கிக் காசோலை (பெறுமதி ரூபா 5990) துறைமுக கூலி தொழிலாளர் சங்கம் மேற்பார்வையாளர் திரு சி. ஜப்பிரமணியம் அவர்களின் பணம் ரூபா 8000 ஆகியன திரும்பிக் கிடைக்கவில்லை.

மேலும் பலாலியைச் சேர்ந்த குழந்தைவேல் தங்கவேல் என்பவரின் ரூபா 1 லட்சம் பெறுமதியான தொழிலாளர் இராணுவத்தால் தீமூட்டி எரிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட 25 தொழிலாளர்களும் தமது வாக்கிலக்கள், உடைமைகளை இழந்த நிலையில் வீடு திரும்பி உள்ளனர்.

இவர்கள் அனைவரும் பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு காரணமாக தங்கள் வீடுகள், உடைமைகளை விட்டு அகதிகளாக வெளியேறி வாழ்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இது விடயமாக பலாலிப் பிரதேசக் குழு தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

யாழ் ஆஸ்பத்திரியில்

தூர்ந்து போகும் பதுங்கு குழிகள்

யாழ்ப்பாணம், ஏப். 27

யாழ் ஆஸ்பத்திரியில் வெட்டப்பட்ட பதுங்கு குழிகள் பூரணப்படுத்தப்படாததன் காரணமாக அவை தூர்ந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ் ஆஸ்பத்திரி மீது கோட்டை இராணுவத்தினர் ஷெல் தாக்குதல் நடத்தியதை அடுத்து யாழ் பக்கங்கிராமப் பகுதியை மக்கள் ஆஸ்பத்திரி வளவினுள் பதுங்கு குழி வெட்டும் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

எனினும் இம்முயற்சி பூரணப்படுத்தப்படாமல் இடையில் கைவிடப்படக் காரணமாகவும் அண்மையில் பெய்த மழை காரணமாகவும் பதுங்கு குழிகள் தூர்ந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது. (இ-10)

வரதராஜர் வரலாற்று நூல்

வட்டுக்கோட்டை ஏப். 27

வரலாற்றுப் பெருமையும் பழமையும் வாய்ந்த பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலின் வரலாறு, மகிமை முதலான குறிப்புக்களை தொகுத்து நூலுருவில் வெளியிடுவதற்கு கோவில் வழிபடுவோர் சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இக்கோவில் சம்பந்தமான வரலாறுகள், பாடல்கள், கோவில் உருவாக்கியவர்களது ஆதி விபரங்கள் ஆதாரங்களுடன் இருப்பின் எழிடுவோர் சபைச் செயலாளரும் யாழ் கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரியுமான திரு. வ. சந்திரராஜாவிடம் கொடுத்து உதவுமாறு கோரப்பட்டுள்ளது.

செய்திக்கொத்து

முதலிடம்

மானிப்பாய், ஏப். 27

கொக்குவில், ஸ்ரீ இராமகிருஷ்ண சேவா ஆச்சிரம சங்கம் நடத்திய இராமகிருஷ்ண ஜெயந்தி விழாவில் அதிமேற்பிரிவுப் பேச்சுப் போட்டியில் யாழ்ப்பாணம் பக்கங்கிராமம் இராமநாதன் நுண்கலைப் பிரிவு மாணவி செல்வி தமிழரசி நடராசா முதலாம் இடத்தை பெற்றுள்ளார். (இ-90)

ஷெல்லினால் ஏற்பட்டசேதம்

அச்சுவேலி, ஏப் 27

வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தீவகங்களிலும் யாழ். சாதனா பாடசாலை விளையாட்டு மைதானத்திலும் விழுந்து வெடித்த மூன்று ஷெல்களினால் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் பெரும் குழிகள் காணப்படுகின்றன.

கல்வித் திணைக்களத்தினருடன் கட்டடத்திலும் சேதம் ஏற்பட்டுள்ளன.

திணைக்களத்தில் எவரும் இல்லாததால் உயிர், உடமை சேதங்கள் ஏற்படவில்லை. (இ-11)

அபி. சங்கம் அங்குரார்ப்பணம்

வேலணை ஏப். 25

வேலணை மேற்கு இராம அபிவிருத்திச் சங்கத்தில் அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் மே மாதம் 11 ஆம்திகதி வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. சி. சடாக்சரசர்மா தலைமையில் நடைபெறும். (உ-167)

வடமராட்சியில் பல வீடுகள் சேதம்

வல்வெட்டித்துறை, ஏப் 27

கடலில் இருந்தும் நடத்தப்பட்டுவரும் ஷெல் தாக்குதல்களால் பலரின் வீடுகள் சேதமடைந்தன.

பலர் பதுங்கியமடைந்த நிலையில் மத்திய அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த சிலர் வருமாறு:

ம. சிவியோன் (வயது 22) பருத்தித்துறை, ஆ. செல்வியா (வயது 67) பொலிகண்டி, இ. நியாதராசா (வயது 18) பருத்தித்துறை, மா. வல்லிபுரம் (வயது 50) கரவெட்டி. (இ-160.

12 புதிய இராம சேவையாளர்

கொடிகாமம், ஏப் 27

அண்மையில் நடைபெற்ற இராமசேவை அலுவலர்கள் பிரிவு விஸ்தரிப்பில் 13 இராம சேவை அலுவலர்கள் அடங்கிய தெல்மராட்சிப் பகுதியில் மேலும் 12 புதிய இராமசேவை அலுவலர்கள் நியமனம் பெறவுள்ளனர். (இ-75)

பதிவு வைத்தியர் இடமாற்றம்

இளிநொச்சி, ஏப். 27

வல்வெட்டித்துறை இந்திராணி அரசினர் மருத்துவத்தில் பதிவு வைத்தியராகக் கடமையாற்றிய திருமதி பத்மாயினி சிவதாஸ் முதலாம் திகதி முதல் இளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (இ-ள-67)

மற்றும் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப், 27

பொம்மர் தாக்குதலுக்கு இலக்கானவர்களில் மேலும் ஒருவர் மரணமானார்.

புலோலியைச் சேர்ந்த எஸ். நந்திவி (வயது 32) என்பவரே இறந்தவர் ஆவார்.

[illegible] பெற்றோர் [illegible] எட்டுப்போர் ஏற்கனவே மரணமாகியிருந்தனர். (இ-11)

சிலை கதைகளில்

சித்திரவேலாயுதர் சித்திரத்தேர் வெள்ளோட்டம்

அச்சுவேலி, ஏப். 27

அச்சுவேலி வடக்கு ஸ்ரீ சித்திரவேலாயுதர் தேவஸ்தான சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா மே மாதம் 4 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

அச்சுவேலியைச் சேர்ந்த பிரபல சிற்பாசாரியார் திரு. வி. கணேசமூர்த்தி குழுவினர் இந்த புதிய சித்திரத்தேரைச் செய்து முடித்துள்ளனர் (இ-11)

உற்சவம் ஒத்திவைப்பு

நீர்வேலி, ஏப்ரல் 27

கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருந்த நீர்வேலிக் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் கடைசி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டது (உ-110)

பெரியார்மொழி

குறள்

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு மெல்லாந் தலை.

பொருள்

தம்மைவிட (அறிவு முதலியவரிலும்) பெரியவர் தமக்குச் சுற்றத்தாராகுமாறு நடத்தல், வலிமை [illegible] எல்லாவற்றிலும் சிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L 89 (விஞ்ஞானம்)
(பிரிவு 2)
சௌந்தி B Sc (Hons) | செல்வா (B. Sc. Hons)
ஏப்ரல் 25 இல் ஆரம்பம்
காலை 10-00 மணி
Niru Tuition Centre
KONDAVIL.

உதயன்

27 - 04 - 1987 திங்கள்மாலை

மே 5 இல்
O/L Day Class (பிரிவு 4)
* முற்றிலும் பாடசாலை போன்ற வகுப்பில் கல்வி கற்பிக்கப்படும்.
காலை 8-00 -- 1-30 வரை
* கல்வியின் தரத்திற்கு கடந்தகால பெறுபேறுகள் சான்றாகும்
நிரு டியூசன் சென்ரர்
கோண்டாவில்.

வித்தியம்

ஏன், மூளியர்களுக்கு தாலி கட்டப் போகிறீர்! வானத்தாக்குதல் விண்ணருக்கு மூன்று நாலு நாள் ஒய்வு கொடுத்திருக்கினமாம். சிறிலங்கா செல்லிருக்கிறார் ஆனால் யாழ்ப்பாணத்திலே பாவலர் ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடந்த தாலே வருகுது! ஹெலி [என்ன தண்ணிரிலிட்ட பறக்கிறது?

மூன்று நாளாய் கண்ணரையிற்றி. எக்கச் சக்கமாய், அளவு கணக்கிறி குண்டுகளைக் குடாநாடு முழுவதும் வீசினவை என்கிறே, அதாலே குண்டுகள் முடிஞ்ச போச்சுப் போலே பாகிக்காக் அல்லது இஸ்ரவேலிலிருந்து குண்டுகள் வரவேணுமாகும்.

புதன், வியாழன், வெள்ளியிலே முழு அளவிலே, யுத்தம் ஒன்று நடக்கிற காலத்தை விட மணிக்கு மணி குண்டு வீசினவை. அப்படி யென்டா குண்டு முடியாமல் என்ன நடக்கும்? இதுக்குமேலே பெரிய முஸ்பாத்தி என்னென்டா, போராளியின்னர் காம்புகளுக்குப் பக்கத்திலே இருக்கிற பொதுமக்களை வெளியிலே கொண்டு போகிறதாலும் தாங்கள் குண்டு வீச்சு நடத்தினதாய் பெரிய செய்தியாய் சொல்லுகினம். சனம் பாதாளப்புகுகி ஆலயங்கள், தேவாலயங்கள் பள்ளிக்கூடங்கள் கட்டிடங்களுக்குக் போய் இருந்தாலும் அங்கை எல்லாம் குண்டு வீசி சொல்லுகினம். பிறகு சனத்தை வெளியேறச் சொன்னதாய் பேய்க் கதை கதைக்கினம்.

தமிழ்ச் சனத்திலை தங்களுக்கும் ஏதோ அக்கறை, கவனம் இருப்பதாய் காட்டிக் கொள்வதாக்கும்.

சிங்களப் பகுதியிலை சனம் செத்தால் அவை படுறபாடு. புறக்கோட்டைச் சம்பவத்தாலை பெரிய கலவரம் வெடிக்கும் என்டு பயந்து வரடங்கலைப் போட்டிருக்கினம். பேச்சுக்களிலை வீராவேசம் கக்கிறினம். அதாவது சனத்தின்னர் ஆவேசத்தை அடக்கிற துக்காக தாங்கள் ஆவேசமாய்ப் பேசிக்கினம். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்டஈடு குடுக்கப்போறதாய் அறிவிச்சிருக்கினம்.

வடக்கு, கிழக்கிலையும் கடந்த நாலு வருஷமாய் அரச பயங்கரவாதத்தால் ஆயிரம் ஆயிரமாய் சனம்சாகுது. நஷ்டஈடு குடுக்கிறதைப் பற்றி ஏதாவது சபை கதைக்கினமே! மரணத்தை அத்தாட்சிப்படுத்த பத்திரமே குடுக்காதவை தமிழருக்கு [நஷ்டஈடு நிவாரண உதவியா குடுப்பினம்?

வெளிநாடுகளிலை இருந்து நிதி உதவி பெறுவதற்கு ஒரு தந்திரமும் உதித்துக் குண்டு வெடிப்பு நடந்ததாய் ஒரு கதை அடிபடுகுது. கடன் குடுக்கப் பின்விக்கிற உதவி வழங்கும் நாடுகளின் அனுதாபத்தைப் பெற்றுக் கடிய 'குரிய' வாங்குவதற்காக அரசாங்கமே இந்தக் குண்டை வைச்சிருக்கலாம் என்டும் ஒருவாம்.

* * * *

குண்டு வீச்சையும் படைகள் நடத்தத் துடங்கினதோடை இஞ்சை 'யாழ்ப்பாணத்திலை வதந்தி குண்டுகளுக்கும் குறைவில்லை. ஒவ்வொருவரும் தங்கள்தங்கள் மனக்குத் தோன்றுவதை எல்லாம் வதந்தியாக்கி விட்டு விடுகினம்.

சனமும் அதுகளைக் கேட்டுப் பயந்தோடை இருக்குதுகள். குண்டு விழுந்துகொண்டிருக்கிறது வேறை; அது நடக்கப் போகுது இது நடக்கப்போகுது என்டை வதந்தியாகக் கேட்டுச் சாகிறது வேறை.

வதந்தியளும் என்டால் செத்த பாம்பு தூக்குது என்டை கணக்குத்தான். வதந்தியளை உண்டாக்கிப் பரப்பிற நிலை சில பேருக்கு ஒரு விதத்தை இன்பம். அவையின்னர் இன்பம் எந்தியை யோரத் துன்பப்பட வைக்கும் என்டதை அவை நினைக்கப்பார்க்கிறயில்லை.

ஷெல் அடி, குண்டடி என்டு ஏக்கி ஏக்கிப் பயத்தாலை இருதயம் கொஞ்சம் கொஞ்சமாய் சுருங்கிப் போய் இருக்கிற சனம் உந்த வதந்தியளைக் கேட்டு வருத்தக்காரராய் மாறதுக்கு ஆஸ்பத்திரியளியையும் சரியான மருந்துகள் இல்லை. சனம் வீணா நோய் வந்து அவதியாகிற நிலை தான் வதந்தி பரப்புவோரும் ஒரு விதத்திலை பலடையுஞ்சுக் சமன்!

அதாலை அவையைப் பற்றியும் சனம் மெத்தக் கவனமாய் இருக்க வேணும். அவை கடன் இருந்து கொல்லும் வியாதியள் போலவை!



நான் மனநோயாளி அல்லன்;
ஆகவே ராஜினாமாத் தேவையில்லை

ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 27

எனக்கு உடல் நலக் குறைவு. சித்தவாதீன மற்றநிலை ஏற்படவில்லை. எனவே நான் ஜனாதிபதி பதவியில் இருந்து ராஜினாமாச் செய்ய வேண்டிய தேவை ஏற்படவில்லை. பதவிக் காலம் முடியும்வரை நான் பணியாற்ற முடியும்

– இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா சொன்னார்.

சுதந்திரக் கட்சியின் நேற்றுக்காலை நடந்த ஐ.தே.க. கருத்தரங்கில் ஜனாதிபதி பேசினார்.

அப்போது அவர் மேலும் சொன்னதாவது;

ஜனநாயக ரீதியிலான அரசியல் கொள்கைகளை உடையவர்கள் அனைவரும் பயங்கரவாதத்தையும் பயங்கர வாதிகளையும் அழிக்க எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து மட்டுமே கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர்.

ஈழ எதிர்ப்பு, வடக்கு-கிழக்கு மாகாண எதிர்ப்பு, வன்செயல் எதிர்ப்பு பயங்கரவாத எதிர்ப்பு ஆகியவை குறித்து அவர்களுக்கும் அரசுக்கும் இடையே கருத்து வேறுபாடு கிடையாது

இன்றைய சூழ்நிலையில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவது பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்துக்கு இடையூறு விளைவிப்பதாகவே அமையும்

பயங்கரவாதிகளுக்கு எனது அரசு இந்தியாவுடன் சேர்ந்து நட்புறவுக் கரத்தை நீட்டியது பலன் அளிக்கவில்லை.

இந்த நிலையில் பயங்கரவாதிகளுக்கு எதிரான அரசு நடவடிக்கை எடுத்து உள்ளது ஜனநாயகக் கொள்கையில் நம்பிக்கை கொண்டு உள்ள சக்திகள், ஜனநாயக முறையைப் பேணிக் காப்பதற்காக ஏன் அரசுடன் ஒத்துழைக்கக் கூடாது?

இன்று சிங்கள மக்களே தீவிரவாதிகளின் இலக்குகளாக உள்ளனர்.

இந்தக் கட்டத்தில் அரசியல் தலைவர் ஒருவரை ராஜினாமாச் செய்யுமாறு கோருகின்றார்கள். அப்படி ராஜினாமாச் செய்வது கோழைத்தனமான செயல்; விவேகமற்ற செயலும் கூட.

இன்றைய அரசமைப்புச் சட்டத்தின்படி கடந்த நலக்குறைவு, சித்த சுவாதீனமற்ற நிலை ஆகிய காரணங்களுக்காகவே ஜனாதிபதி பதவி விலகலாம். அந்தக் காரணங்கள் எனக்குப் பொருந்தா

ஆனால் நாடாளுமன்றத்தைக் கலைத்து நான் தேர்தல் ஒன்றுக்கு உத்தரவிட முடியும். அப்படி நாடாளுமன்றத்தில் உள்ளது

பொதுத் தேர்தல் ஒன்றை எப்போது நடத்துவது என்று நான் முடிவு செய்யும்வரை தற்போதைய நாடாளுமன்ற அரசு எப்பிக்கைத்தியில் இருந்தே என் அரசாங்கத்தை அமைப்பேன்.

– இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா அறிவித்தார் (உ-எ)

ரெனியின் நம்பிக்கை

டோக்கியோ, ஏப். 27

நாடு பிரிவதற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா அனுமதிக்கமாட்டார் ஆனாலும் இன்னும் மூன்று மாதங்களுக்கு இடையில் இலங்கையில் அமைதி பிறக்கும்.

இப்படிச் சொன்னார் நிதி அமைச்சர் ரெனி டி மெல்.

ஜப்பானில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் நிதி அமைச்சர் இந்த நம்பிக்கை வெளியிட்டார். (உ-எ)

குண்டுவீசிய இடங்களில் கூட்டம் கூடுவதைத் தவிர்க்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 29

விமானத் தாக்குதல் நடைபெற்ற இடங்களில் கூட்டங்கூடி வேடிக்கை பார்ப்பதை முற்றாகத் தவிர்த்துக்கொள்ளுங்கள்

ஸ்ரீலங்கா அரசு பொதுமக்களை இலக்காகக் கொண்டு விமானத் தாக்குதல்களை நடத்துகிறது.

எனவே தமிழீழ மக்களுக்கோர் கோரிக்கை கடனமாக விட்டுக்விடு பொது இடங்களில் கூடுவதுக் குழிகளை அமையுங்கள்.

குண்டுவீசிய இடத்தில் எக்காரணம் கொண்டும் கூட்டம் கூடாதீர்கள் குண்டுவீச்சு நேரங்களில் கூட்டமாக நிற்று வேடிக்கை பார்ப்பதையோ அல்லது ஏனைய வேலைகளையோ தவிர்த்துப் பதுங்குகுழிகளில் இருங்கள்.

இவ்வாறு தமிழீழ மக்களுக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் திரு வேலுபிரபாகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் பகுதித் துறையில் குண்டு வீசிய இடத்தில் சற்று நேரத்துக்குப் பின் மீண்டும் குண்டு வீசப்பட்டது குறிப்பிடத்தக்கது (இ-10)

அச்சுவேலியில் டிரான்ஸ்போமர் அமைப்பு வேலை தாமதம்

அச்சுவேலி, ஏப்ரல் 27

அச்சுவேலிப் பகுதியில் இரண்டு மின்மாற்றிகளை (டிரான்ஸ்போமர்களை) அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்திருந்தும் அவற்றை அமைப்பதற்கான வேலைகள் தாமதம் அடைந்திருக்கின்றன.

இவ்வமைப்பு வேலைகளுக்கான பொறுப்பை இலங்கை மின்சாரசபை ஏற்றிருக்கிறது.

ஆனால் இலங்கை மின்சாரசபைக்கு யாழ் மாவட்ட சபையின் அச்சுவேலி உப அலுவலகம் மின்சாரக் கட்டண நிலுவையாக பல லட்சம் ரூபா செலுத்த வேண்டியுள்ளது.

இந்த நிலுவை செலுத்தப்படும் வரை மின்மாற்றிகள் அமைக்கப்படும் வேலைகள் தாமதமாகும் என்று தெரிய வருகிறது.

மின்பாவனையாளர்கள் தாம் செலுத்தவேண்டிய மின்சாரக் கட்டண நிலுவையை உப அலுவலகத்திற்கு உடன் செலுத்தி ஒத்துழைப்பு நல்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது (உ-11)

கடும் சோதனை தடை முகாம்களில்

யாழ்ப்பாணம் ஏப் 27, இராணுவத் தடை முகாம்களில் பயணிகளையும் வாகனங்களையும் சோதனையிடுவது மீண்டும் அதிகரித்திருக்கிறது.

கடந்த செவ்வாய்க் கிழமை கொழும்பில் நடைபெற்ற குண்டு வெடிப்பையடுத்தே சோதனைகள் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் பயணிகளே கடும் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என்ற வித்தியாசமின்றி சகலரும் இராணுவத் தினரால் வாகனங்களை விட்டு இறக்கப்பட்டு சோதனைக் குள்ளாக்கப்படுகின்றனர்

மீண்டும் குண்டு வெடிக்கலாம்

யாழ்ப்பாணம், ஏப். 27

கொழும்பில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டிருக்கிறது ஆனால் அங்கு மற்றொரு குண்டு வெடிக்காது என்பதற்கு எந்த உறுதியும் இல்லை.

–இப்படி தேசிய பத்தேஜஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறியதாக பி பி ஸி. நேற்றிரவு அறிவித்தது.

பூமியதிர்ச்சி

ஜகார்த்தா. ஏப். 26

வட சுமத்திராவில் ரிஸ்டர் அளவிற்கு பூமி அதிர்ச்சி ஏற்பட்டது. சேத விவரங்கள் இன்னும் வெளிவரவில்லை

இந்தியா - - -

(1ம்-பக்கத்தொடர்ச்சி)

அளவிலான விவாதத்தை மேற்கொள்ள முதலமைச்சர் எம். ஜி இராமச்சந்திரன் தீர்மானித்ததும் அரசியல் கட்சிகளிலிருந்தும் முக்கியத்துவம் பெற்றுள்ளது

இவ்விவாதம் இன்று திங்கள் தமிழ்நாடு சட்டசபையில் நடைபெறும். (இ-எ)

தமிழர் தாயகம் கோருவது லலித்திற்கு சிரிப்பாக இருக்கிறதாம்!

கொழும்பு, ஏப். 27

பத்துச் சத விதமான மக்கள் நாட்டில் முப்பத்து மூன்று சதவிதமான பிரதேசத்தைத் தாயகமாகக் கோருவது சிரிப்புக்கிடமானதாகும்

– இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

தமிழருக்கு தாயகம் ஒன்றை அமைக்க தீவிரவாதிகள் முயற்சிக்கின்றனர். அரசாங்கம் ஒரு போதும் இதை அனுமதிக்காது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், ஈரோஸ் ஆகியவற்றின் நோக்கம் வடகிழக்கை வெற்றிகொள்ளப் போவது இல்லை. அதற்கு அனுமதிக்கப்படவும் மாட்டாது.

சிறுபான்மை யினர் பெரும்பான்மை மக்களுடன் சேர்ந்தே அரசு நிர்வாகத்தில் பங்கேற்க வேண்டும்.

– இப்படி அமைச்சர் அத்துலத்முதலி தெரிவித்தார். (உ-எ)

தூரசேவைகள் தொடர்ந்து நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப் 27

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு, அனுராதபுரம், திருகோணமலை, மன்னார், கண்டி ஆகிய தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் தொடர்ந்தும் இடை நிறுத்தப்பட்டுள்ளன

இதே வேளை வவுனியா வரையான யாழ் தேவி இரவுப் புகையிரத சேவை தொடர்ந்தும் நடைபெற்றுவருகின்றது

யாழ்ப்பாணக் காரணங்களைக் கருதிய தூர இடங்களுக்கான சேவைகள் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

எனினும் குடாநாட்டிற்கான உள்ளூர் சேவைகள் நிறையோடு ஓரளவு நடைபெற்றுவருகின்றன (உ-10)

காயமடைந்த தாதியை விமானத்தில் கொழும்பு கொண்டுசெல்வதில் தடங்கல்

அச்சுவேலி, ஏப்ரல் 27

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் கடமையில் ஈடுபட்டிருந்த போது ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகி ஆபத்தான நிலையில் இருக்கும் தாதியை சிகிச்சைக்காக கொழும்புக்கு விமானத்தில் எடுத்துச் செல்வதில் தடங்கல் ஏற்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்துக்கான தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதால் காயமடைந்த தாதி திருமதி பரஞ்சோதியை விமானத்தில் ஏற்றிச் செல்வதற்கான ஒழுங்குகளை உரியமுறையில் செய்ய முடியவில்லை என்று கூறப்படுகிறது.

காயமடைந்த தாதியின் கணவர் திரு. ஏ. பரஞ்சோதி வவுனியாவுக்குச் சென்று அரசாங்க அதிபருடனும் இணைப்பதிகாரியுடனும் பேச்சுவார்த்தை நடத்தி விமானப் பிரயாணத்திற் செய்ய ஏற்பாடுகள் செய்யுமாறு கோரினார்.

விடயம் கைகூடவில்லையாம். அவர்கள் யாழ் மாவட்ட இணைப்பதிகாரிக்கு கடிதம் கொடுத்து அனுப்பிவைத்தனர்.

யாழ் பெரியாஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் க. நச்சினார்க்கினியன், யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் ஆகியோர் இந்த விடயத்தில் கூடிய அக்கறை எடுத்தபோதிலும் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள முடியாமல் இருப்பதால் எதிர்பார்த்த மாதிரி விமானப் பிரயாணம் ஒழுங்கைச் செய்யமுடியவில்லை என்று கூறப்படுகின்றது

ஆஸ்பத்திரி ஷெல் தாக்குதலில் படுகாயமடைந்த தாதி திருமதி பரஞ்சோதி மூளையில் ஏற்பட்ட காயத்திலும் உடலின் ஒரு பகுதி செயலிழந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரி அவசர சிகிச்சைப் பிரிவில் [illegible] வருகிறார்.

இவரை கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதித்து மூளையில் சத்திர சிகிச்சை செய்வதற்கான செலவை ஏற்பதாக சுவாதீர அமைச்சு அறிவித்திருந்தது. (இ-11)

இரத்தினக்கல், நகைகள் ஏற்றுமதி

புதுடில்லி, ஏப் 26

கடந்த ஆண்டு இந்தியாவில் இருந்து 2,100 கோடி ரூபா பெறுமதியான இரத்தினக் கற்கள், நகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன (இ-எ)

பிலிப்பீன்ஸில் கிளர்ச்சி?

மணிலா, ஏப் 27

பிலிப்பீன்ஸ் இராணுவத்தில் இன்னும் ஒரு கிளர்ச்சி ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பிலிப்பீன்ஸ் இராணுவம் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது (உ-எ)

தமிழர் தாயகம் கோருவது லலித்திற்கு சிரிப்பாக இருக்கிறதாம்!

கொழும்பு, ஏப். 27

பத்துச் சத விதமான மக்கள் நாட்டில் முப்பத்து மூன்று சதவிதமான பிரதேசத்தைத் தாயகமாகக் கோருவது சிரிப்புக்கிடமானதாகும்

– இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

தமிழருக்கு தாயகம் ஒன்றை அமைக்க தீவிரவாதிகள் முயற்சிக்கின்றனர். அரசாங்கம் ஒரு போதும் இதை அனுமதிக்காது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், ஈரோஸ் ஆகியவற்றின் நோக்கம் வடகிழக்கை வெற்றிகொள்ளப் போவது இல்லை. அதற்கு அனுமதிக்கப்படவும் மாட்டாது.

சிறுபான்மை யினர் பெரும்பான்மை மக்களுடன் சேர்ந்தே அரசு நிர்வாகத்தில் பங்கேற்க வேண்டும்.

– இப்படி அமைச்சர்

10 வீத மக்களுக்கு 33 வீத பிரதேசமா?

புறக்கோட்டை குண்டுவெடிப்பு:

ஆடையாளம் காணாத சடலங்கள் இன்று அடக்கம்

கொழும்பு, ஏப் 27

புறக்கோட்டை வங்கி நிலையக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் ஆடையாளம் காணப்படாத சடலங்கள் இன்று (திங்கள்) நல்லடக்கம் செய்யப்படும்.

–இப்படி சவிட்டலைத்திய அதிகாரி டாக்டர் சங்கரா தெரிவித்தார். 88 சடலங்கள் இன்னும் ஆடையாளம் காணப்படவில்லை. 86 சடலங்கள் ஆடையாளங் காணப்பட்டன. (உ-எ)

வலி கிழக்கில் புதிதாக கிராமசேவகர் பிரிவுகள்

அச்சுவேலி, ஏப்.27

வலி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மேலும் 7 கிராம சேவையாளர் பிரிவுகள் புதிதாக செயற்படவுள்ளன.

தற்பொழுது செயற்பாட்டில் இருக்கும் வெளிய கிராம சேவையாளர் பிரிவுகள் பிரிக்கப்பட்டு புதிய கிராம சேவையாளர் பிரிவுகள் உருவாக்கப்படுகின்றன.

பத்தமேனி கிராம சேவையாளர் பிரிவு பத்தமேனி, வளலாய் இடைக்காடு கிராம சேவையாளர் பிரிவுகளாகவும்—

புத்தூர் மேற்கு கிராம சேவையாளர் பிரிவு புத்தூர் மேற்கு கிராம சேவையாளர் பிரிவுகளாகவும்—

சிறுப்பிட்டி கிராம சேவையாளர் பிரிவு சிறுப்பிட்டி அச்செழு பிரிவுகளாகவும்—

அச்சுவேலி கிராம சேவையாளர் பிரிவு அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி வடக்கு பிரிவுகளாகவும்—

புத்தூர் மேற்குப்பிரிவு நவக்கிரி, ஆவரங்கால் எனவும்—

உரும்பராய் கிராம சேவையாளர் பிரிவு உரும்பராய் வடக்கு, தெற்கு எனவும்—

புதிய கிராம சேவையாளர் பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன.

புதிய கிராம சேவையாளர் பிரிவுகளை உருவாக்கும் திட்டத்தின் கீழ் இந்தப் பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. (உ-11)

சிறுமிக்கு வால் முளைக்கிறது

பீகிங், ஏப். 26

சீனாவின் தென் மேற்கு மாகாண கிராமம் ஒன்றில் வசித்துவரும் பத்து வயதுச் சிறுமி ஒருத்திக்கு வால் முளைத்து வருகிறது

பிறந்த சமயம் இச் சிறுமிக்கு விரல் நீளம் வால் இருந்தது.

இப்போது ஏழு அங்குலங்களுக்கு வால் வளர்ந்துவிட்டது.

இந்தவகையான ஷாங்காயில் இருந்து வெளி வரும் 'லிபரேஷன் டெயிலி' என்ற பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

அரசாங்க மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கும் இச் சிறுமிக்கு எந்தவகை வைத்திய சிகிச்சை அளிக்கப்படும் என்ற விவரத்தை அப் பத்திரிகை வெளியிடவில்லை (உ-எ)

அளம்பில் செம்மலையில் கைதாகி

தடுத்து வைக்கப்பட்ட 30 பேர் விவரம்

முள்ளியவளை, ஏப்ரல் 27

இம்மாத முற்பகுதியில் அளம்பில் செம்மலைப்பகுதியில் ஆயுதப் படையினரால் வைது செய்யப்பட்ட 76 பேரில் 46 பேர் முல்லைத்தீவு அரசாங்க அதிபர், முல்லைத்தீவு பிரதேசக் குழுவினரின் முயற்சியால் வவுனியா இராணுவ முகாமில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர்.

ஏனைய 30 பேரும் விசாரணைக்காக வவுனியா இராணுவ முகாமிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டோரின் விவரம் வருமாறு;

ஆ. தேவதாஸ், ந. விக்னேஸ்வரன், கு. குணம் ஐ. [illegible] ஆ. தர்மலிங்கம் வே. ஞானசீலன் சி. திருச்செல்வம் வ. [illegible] ராசா ஆ. [illegible] யோகராசா மு. பாலக்கிருஷ்ணன் வை. பீவதப்பன் மா. பெரியாண்டி கா. பாஸ்கரன் இ. அந்தோனி மரியதாஸ் ப. பாஸ்கரன் ப. நடராசா வ. உதயசீலன் க. குலசேகரம் க. பேரின்பராசா ஆ. ஆரோக்கியநாதன் த. கிஷாந்தம். க. யோகநாதன் சி. ஞானப்பிரகாசம் அ. சிவராசா வா. செல்லிராசா மா. பஞ்சநாதம் க. புவனேந்திரன் மு. கோவிந்தன் ஐ. பரந்தாமன். (இ-எ-91)

விவசாயிகளுக்கு உதவ கழகங்கள் முன்வர வேண்டும்

வல்வெட்டித்துறை, ஏப்27

இளம் விவசாயிகள் கழகம் மகவிர் கிராம முன்னேற்றச் சங்கம் போன்ற அமைப்புக்கள் விவசாயிகளின் உற்பத்திப் பொருள்கள் அதிகரிக்கும் காலங்களில் அவற்றைப் பதப்படுத்தி வைக்கக்கூடிய நிட்டங்களை நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும்

சங்கரன் கிழக்கு தொட்டிலடி விவசாய மன்னன் திரு க. வீரசிங்கம் இல்லத்தில் விவசாய உற்பத்திப்பொருள்கள் உணவுப் பண்டங்களைச் சேமித்து வாடகைக்கும் மரியபிள்ளை திருக்கருத்தரவிற்கு நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை யாற்றிய சங்கரன் கிழக்கு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. ஜி சிதம்பரநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கரன் கிழக்குப் பகுதியிலுள்ள யுவதிகளுக்கு விசேஷமாக இக் கருத்தரவிற்கு நடைபெற்றது.

சூறுவளியால் 15 பேர் பலி

டாக்கா. ஏப். 27

பங்களாதேஷில் கடந்த சனிக்கிழமை வீசிய சூறுவளியில் 15 பேர் மரணமடைந்தனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி இரண்டாம் ஒழுங்கு 15, ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் லிமிடெட் (பிறைவேட்) லிமிடெட் அதாயனத்தாரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. வெளியீடு திகதி 27 - 04 - 1987 தொலைபேசி இல. 24805 , 22075